Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள்
16+8+XVI

விலை
ரூ. 60

சுடர் : 38
கதிர் : 239

ஞாயிற்றுக்கிழமை 23 ஜூலை 2023

ஆடி 07 ஆம் ... 54



# மோடி எதையும் சொல்லட்டும் முடிவெடுப்பது நாடாளுமன்றமே!

## அமைச்சரவைப் பேச்சாளர் திட்டவட்டம்

**கொழும்பு, ஜூலை 23**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்துள்ளார். அவரின் கோரிக்கையை நிறைவேற்றுவதா, இல்லையா என்பதை இலங்கை அரசாங்கமும் நாடாளுமன்றமும்தான் முடிவெடுக்கும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன.**

»02

## ‘13’ முழுமையான திருப்தியல்ல; ஆனாலும் நல்லம், நல்லம்!

### இரா.சம்பந்தன் கருத்து



யாழ்ப்பாணம், ஜூலை 23

13ஆவது திருத்தச் சட்டம் எமது மக்களுக்கு முழுமையான திருப்தியளிக்காவிட்டாலும் கூட பாரதப் பிரதமரின் கோரிக்கையை நாம் வரவேற்கின்றோம் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

»02

## இந்தியா – இலங்கை நிலத் தொடர்பு தமிழ்த் தேசியக் கட்சிகள் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

இந்தியப் பிரதமரின் 13ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல் போன்ற அறிவிப்புக்கள் தொடர்பிலும், இந்தியா - இலங்கை இடையிலான »15

## தேசிய நல்லிணக்கத் திட்டம்; கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

கொழும்பு, ஜூலை 23

இனப்பிரச்சினைத் தீர்வு நிகழ்ச்சித் திட்டம் பற்றி கலந்துரையாடல் நடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலை »02

## 10 ஆம் தரத்திலேயே சாதாரணதரப் பரீட்சை

### நீதியமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 23

க.பொ.த. சாதாரணதரத்தை 10ஆம் தரத்திலும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையை 12ஆம் தரத்திலும் நடத்தலாம் என நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிந்துரைத்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். அத்தோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையை இல்லாதொழிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஒ-இ)

## யானைகளை அனுமதியின்றி யாழில் பயன்படுத்தத் தடை!!!

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கு யானைகளைப் பயன்படுத்துவதற்கு முறையான உரிய அனுமதிகள் பெறப்பட வேண்டும் என மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் »15

குருந்தூர்மலையில்

## தமிழர்களின் வாழிடமுமில்லை இந்து வழிபாடும் அங்கில்லை

### பௌத்த தொல்லியலாகப் பிரகடனம் என்கிறார் அமைச்சர் விதுர

கொழும்பு, ஜூலை 23

குருந்தூர்மலை 1931 ஆம் ஆண்டுகளில் 'பௌத்த தொல்லியல் பிரதேசம்' என வர்த்தமானி »15

## ரயில் மோதியதால் முதியவர் உயிரிழப்பு

கொடிகாமம், ஜூலை 23

பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்றவரை மோதித்தள்ளியது ரயில்.

»02

## அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை!!!

கொழும்பு, ஜூலை 23

உள்நாட்டுப் பணவீக்கம் மற்றும் உள்ளூர் அரிசி விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் பாசுமதி அல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதியை இந்தியா தடை செய்துள்ளது.

உக்ரைன் தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா »16

உங்களுக்காக கவர்ச்சியானதொரு நிகரற்ற தீர்வு

நிவாரணம், சௌகரியம், வலிமை

3 ஆவது பக்கம் பார்க்கவும்

## நீதிக்காக எவ்வளவு ஆண்டுகள் தமிழர்கள் காத்திருக்கவேண்டும்?

### கறுப்பு ஜூலை நினைவையொட்டி சரவணபவன் கேள்வி



யாழ்ப்பாணம், ஜூலை 23

கறுப்பு ஜூலை இனக்கலவரம் அரங்கேறி 40 ஆண்டுகளாகின்ற நிலையில் அதனால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. நீதிக்காக தமிழ் மக்கள் இன்னும் எவ்வளவு ஆண்டுகள் காத்திருக்கவேண்டும்? என்று கேள்வி »15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### மோடி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது, 13ஆவது திருத்தம், மாகாணசபைத் தேர்தல், தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுதல் உள்ளிட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் செய்யும் என்று நம்புவதாக இந்தியப் பிரதமர் மோடி ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பந்துல குணவர்த்தன கருத்துத் தெரிவித்த போது;

'13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதும் இன்று அல்லது நாளை செய்யக்கூடிய விடயங்கள் அல்ல. அவை தொடர்பில் அரசும், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றமும்தான் முடிவெடுக்கும். இலங்கையில் தமிழ் மக்கள் மட்டும் வாழவில்லை. இங்கு வடக்கு - கிழக்கு என்பன மட்டுமே மாகாணங்களும் இல்லை. மூவின மக்கள் வாழும் இந்த நாட்டில் 9 மாகாணங்கள் உள்ளன. எனவே, எந்தவொரு இன மக்களையும் பாதிக்காத வகையிலும், எந்தவொரு மாகாணத்துக்கும் பிரச்சினைகள் வராத வகையிலும் அரசு தனது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது' என்றார் பந்துல. (அ-ஒ,5,22)

### '13' முழுமையான...

ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு இந்தியப் பிரதமர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேட்டபோதே இரா.சம்பந்தன் 'உதயன் பத்திரிகைக்கு' மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சின் பிரகாரம் அவருடைய ஆலோசனையைக் கேட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு செயற்படுவது நல்லம். அது நாட்டுக்கும் நல்லம். மக்களுக்கும் நல்லம்.

பாரதப் பிரதமர் மேலதிகமாக எதனையும் கேட்கவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் நீங்கள் (இலங்கை அரசு) நிறைவேற்றிய 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்திச் செயற்படவேண்டும் என்றே அவர் கோரியுள்ளார்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் எமது மக்களுக்கு முழுமையான திருப்தியளிக்காவிட்டாலும்கூட பாரதப் பிரதமரின் கோரிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

மாகாணசபைகள் தற்போது வெறுமனவே உள்ளன. மீண்டும் அந்த மாகாணசபைகள் இயங்க வேண்டுமெனில் தேர்தல் ஒன்று மிகவும் அவசியம். எனவே, மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்தக் கோரியுள்ளார் பாரதப் பிரதமர். அதையும் நாம் வரவேற்கின்றோம்.

13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையான தீர்வாக அமைய முடியாது. இருந்தாலும் பாரதப் பிரதமர் சொல்லியதைக்கேட்டு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது நாட்டுக்கும் நல்லம்; அரசுக்கும் நல்லம்; மக்களுக்கும் நல்லம். எல்லோருக்கும் நல்லம் - என்றார். (அ-ஒ,5,22)

### தேசிய...

வர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கான அழைப்பு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு நேற்று முன்தினம்மாலைஅழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளாரென இந்தியாவுக்கு ரணிலுடன் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பிய ஜீவன் தொண்டமான் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,இ)

# தனிநாட்டுக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தயாரா?

## ஆளும் கட்சியினருக்கு கஜேந்திரகுமார் சவால்

**கொழும்பு, ஜூலை 23**

**தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகிறார்களா? சமஷ்டியாட்சியைக் கோருகிறார்களா? தனி நாட்டைக் கோருகின்றனரா? என்பதை அறிய துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசுக்கு சவால் விடுத்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்றோரால் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டம், ஒழுங்கு, பொறுப்புக்கூறல் ஆகியன கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் சபையில் சிங்கள மொழியில் உணர்வுபூர்வமாக உரையாற்றினார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளை விமர்சித்தார், சமஷ்டி பிரிவினைவாதத்தை தூண்டும் எனவும் அமைதியாகவுள்ள தெற்கு இளைஞர்களைத் தூண்டி விட வேண்டாம் எனக் குறிப்பிட்டார்.

இதன்மூலம் அவரின் புலமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழர்களின் உள்ளக்கிடக்கையை அறிந்து கொள்ளவதற்கு நீங்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தயாரா என்று கேட்கின்றேன். இதைச் சவாலாகவே எதிரிலுள்ள (ஆளும் கட்சி) உறுப்பினர்களிடத்தில் எழுப்புகின்றேன். ஒற்றையாட்சியில்வாழவிரும்புகிறார்களா அல்லது சமஷ்டியைக் கோருகிறார்களா என்பதை அறிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு கேட்கின்றேன். உங்களுக்கு முதுகெலும்பு இருந்தால் தனிநாட்டைக் கோருகின்றார்களா என்பதை அறிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துங்கள்.

உங்கள் எண்ணத்துக்கு ஏற்ப வடக்கு-கிழக்கு மக்களின் எண்ணத்தை இங்கே குறிப்பிடவேண்டாம் - என்றார். (அ-ஒ,இ)

### பளை

# தும்புத் தொழிற்சாலையில் நேற்றுத் திடீர் தீ விபத்து

*யாழ்ப்பாணம், ஜூலை 23*

பளை, இத்தாவிலில் தும்புத் தொழிற்சாலையில் நேற்று இரவு 9 மணியளவில் திடீரென தீப்பற்றியதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருள்கள், மின்சாதனங்கள் எரித்துள்ளன.

தும்புத் உற்பத்திப் பொருள்கள் சுவாலை விட்டு எரிந்ததால் அருகில் காணப்பட்ட பனைமரங்கள் எரிந்தன.

உற்பத்தி ஆலையில் போதிய அளவு நீர் வசதி இல்லாததால் உடனடியாகத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. (ஒ,9)

### ரயில்...



மீசாலை, புத்தூர் சந்திக்கு அருகில் வாகையடிச் சந்தி ரயில் கடவையில் நேற்று மு.ப 11.15 இடம்பெற்றுள்ளது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த செல்லையா பரமசாமி (வயது - 75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த நகர்சேர் கடுகதி ரயிலுடன் மோதியே முதியவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த ரயில் கடவையில், ரயில் வரும்போது சமிக்ஞை ஒலி மட்டுமே எழுப்பப்படும். குறுக்காக வீதித் தடை ஏற்படுத்தும் வசதி இல்லை. இதனாலேயே ரயில் வருவதை அவதானிக்காமல் முதியவர் மோட்டார் சைக்கிளுடன் கடக்க முற்பட்டபோது ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார். (அ-ஒ,9,20,125,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்களுக்கு துணைபோகும் இராணுவம்!

## வலி. வடக்கு மக்கள் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஜூலை 23*

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இராணுவத்தினரால் மீளக் கையளிக்கப்படவுள்ள பகுதிகளுக்குள் திருடர்கள் ஊடுருவி, பொருள்களைத் திருடிச் செல்வதாகக் காணி உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காங்கேசன்துறை, மாங்கொல்லை மற்றும் தென்மயிலை ஆகிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். இருப்பினும் அவை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்நிலையில் தமது காணிக்குள் வெளியாட்கள் சிலர் நடமாடுவது தொடர்பில் அறிந்து அவர்கள் தமது காணிக்குச் சென்றபோது, உயர்பாதுகாப்பு வலய வேலிக்கு உள்ளே வாகனங்களுடன் நடமாடும் திருடர்கள் காணிக்குள் திருட்டுக்களில் ஈடுபடுவதனை அவதானித்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வாகனங்களுடன் சென்று பொருள்களைக் களவாடுகிறார்கள் என்றால் நிச்சயம் அவர்களுக்கு இராணுவத்திடம் செல்வாக்கு இருக்கும். அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிடச் சென்றால் தமக்கு ஆபத்து ஏற்படலாம் என்று காணி உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்தனர். தமது கண் முன்னே பொருள்களைக் களவாடிச் செல்பவர்களை, எதுவும் செய்யமுடியாது இயலாமையுடன் பார்த்துக்கொண்டு, காணி விடுவிப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் காணி உரிமையாளர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். (ஒ-20)

# தங்கையின் தலைமுடியை கத்தரித்த கனடா அக்கா

## தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு

அளவெட்டியில் சகோதரிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறில் தங்கையின் தலைமுடியை அக்கா வெட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் சில நாள்கள் தங்கியிருப்பதற்காக கனடாவில் இருந்து கணவனுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது தங்கையின் வீட்டுக்கு அக்கா வந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கா தனது தாலிக்கொடி மற்றும் சங்கிலியை தங்கையிடம் கொடுத்துவிட்டு வெளியே சென்று மாலை வீடு திரும்பி உள்ளார். மறுநாள் வேறு ஒரு இடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக தங்கையிடம் கொடுத்த தாலிக்கொடி மற்றும் சங்கிலியை கேட்டுள்ளார். தங்கை தாலிக்கொடியைக் கொண்டு வந்து அக்காவிடம் கொடுத்துள்ளார். இதன்போது அக்கா தங்கையிடம் தாலிக்கொடியுடன் சங்கிலியைக் கொடுத்தாகக் கூறியுள்ளார். இதற்கு தங்கை தாலிக்கொடியை மட்டுதான் கொடுத்ததாகக் கூறியுள்ளார்.

இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. சிறிது நேரத்தில் மிகப் பெரிய சண்டையாக மாறியுள்ளது. இதனையடுத்து இருவரும் தலைமுடியை பிடித்துக்கொண்டு சண்டை போட்டுள்ளனர். அக்காவின் கணவர் இதனை அவதனித்து அவர்களைப் பிரித்து வைத்துள்ளார். இதேவேளை - அக்கா, தங்கை ஏமாற்றியதை தாங்கமுடியாமல் கத்தியை எடுத்து தங்கையின் தலை முடியை வெட்டியுள்ளார் என்று தெரிவித்து தங்கையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-இ)

# வடக்கில் காற்று

வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும். எனினும், நாட்டின் மற்றைய பகுதிகளில் சீரான வானிலை நிலவும். அதேவேளை, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்- என்றுள்ளது. (ம)


தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள ஓர் பழைய வீட்டை இடித்து அகற்றிக் காணியை சமப்படுத்தப் பொருத்தமான ஒப்பந்தகாரர்கள் தேவை.
(1600 சதுர அடி) 26.07.2023 இற்குள் தொடர்பு கொள்ளவும்.
(CSI51337)AH-1
Mr. Kumar 077 731 5262





# '13' ஐ நடைமுறைப்படுத்தினால்தான் சமஷ்டிக்குப் பயணிக்க முடியும்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால்தான் நாம் சமஷ்டியை நோக்கிப் பயணிக்க முடியும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1972 மற்றும் 1978ஆம் ஆண்டு அரசமைப்புக்களில் சமஷ்டி தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அது உதாசீனம் செய்யப்பட்டது. இப்போதும்கூட ஓர் அரசமைப்பை உருவாக்கவுள்ளனர். எனினும் சமஷ்டி என்பது இப்போதைக்குத் தீர்வாக அமையாது. இதனால் மாகாணசபை குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டும். மாகாண சபை ஒரு சுயாதீன அமைப்பு அல்ல. இதனை விளங்கிக் கொண்டு மாகாணசபை எங்கெல்லாம் சுயாதீனமாகச் செயற்படலாம் என்று சிந்திக்கலாம்.

மாகாண நிரலில் கல்வி, விவசாயம், உள்ளூராட்சி என்று சட்டங்களை இயற்றக்கூடியதாக அமைந்துள்ளது. நியதிச்சட்டத்தை ஆளுநரின் அனுமதியுடனேயே அமுல்படுத்த முடியும்.

ஆனால் தொடர்ச்சியாக ஆளுநரால் குறித்த சட்டத்தை அமுல்படுத்தாமல் காலங்கடத்த முடியாது அதற்கான காரணத்தை உயர்நீதிமன்றத்தின் ஊடாகவே வெளிப்படுத்தலாம். மேலும் ஜனாதிபதியுடன் ஆலோசனை செய்யவேண்டும். தொடர்ச்சியாக முயற்சிக்கும்பொழுது நாம் நியதிச் சட்டத்தையும் அமுல்படுத்த முடியும்.

முழுமையாக காணி பொலிஸ் அதிகாரம் எமக்கு இல்லையென்று சொல்லுகின்றோம். ஆனால் எம்மிடம் அது சொற்பளவில் உள்ளது. ஒரு மாகாணத்துக்கு உட்பட்ட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரை, மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரை பொலிஸ்மா அதிபர் முதலமைச்சரின் ஆலோசனைக்குட்பட்டே நியமிக்கமுடியும். மாகாண கீழ்நிலை பொலிஸ் உறுப்பினர்களை நியமிக்க மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மட்டுப்பாடு இருக்கின்றது. தேசியப் பாதுகாப்பு வெளிவிவகாரம் தவிர்ந்த பிற சிறிய குற்றங்களை கண்டித்து சட்டத்தை ஒழுங்கமைக்கும் அதிகாரம் உள்ளது. இருக்கக் கூடிய முட்டுக்கட்டைகளை தகர்த்து எறிந்து நாம் பயிற்சி செய்தால் எம்மால் அதிகாரங்களைப் பெறமுடியும்.

சமஷ்டித் தீர்வு எமது உச்ச தீர்வு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இன்று சமஷ்டியை கோருகின்ற தரப்புக்கள் சிங்களத் தரப்பை எவ்வாறு தெளிவுபடுத்தப்போகின்றன? கிழக்கில் இருப்பவர்கள் வடக்குடன் இணைவதற்கு இன்று தயாராக இல்லை. எல்லாவற்றையும்விட 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினாலேயே நாம் சமஷ்டியை நோக்கிப் பயணிக்க முடியும் - என்றார். (ம-125)

# மக்களின் நம்பிக்கையை நாம் கட்டியெழுப்புவோம்

## ஜே.வி.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23

இந்த அரசாங்கத்தால் செய்ய இயலாத வேலைத்திட்டங்கள் எமது ஆட்சியில் முன்னெடுக்கப்படும் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசு மக்களிடத்தே நம்பிக்கையைப் பெறவில்லை. அதனால் அவர்களால் மக்களிடம் செல்ல முடியாது. நாம் மக்களிடம் சென்று உண்மையைக் கூறி பிரச்சினையைத் தீர்ப்போம். இலங்கையைப்போல் வரிகள் அதிகம் உள்ள நாடுகள் எங்கேயும் இல்லை.

இன்னமும் மக்கள் பொருளாதார நெருக்கடியில் மூழ்கித் தவிக்கின்றனர். நாம் ஆட்சியைக் கைப்பற்றினால் மக்களின் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வோம் - என்றார். (ச-22)

# புதிய விடயதானங்களுடன் இனி இறப்புச் சான்றிதழ்கள்

கொழும்பு, ஜூலை 23

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய 12 பிரதான விடயங்கள், 24 உப விடயங்களை உள்ளடக்கி புதிய இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுர ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு, நீதி அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த இறப்புச் சான்றிதழை தயாரித்துள்ளன. இதுவரை வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்களில் இறப்புக்கான காரணம், இயற்கை மரணமா? இல்லையா? என்பனவே குறிப்பிடப்பட்டிருந்தன.

தற்போது, உயிரிழந்தவர் தொடர்பிலும் மரணத்துக்கான காரணம் தொடர்பிலும் சான்றிதழில் குறிப்பிடவேண்டும். அத்துடன் மரணவிசாரணை அதிகாரிகளால் இறப்புச் சான்றிதழ்களில் பதிவிடப்படவும் வேண்டும். இறப்புக்கான காரணத்தை நான்கு விடயங்களின் கீழ் விரிவாகக் குறிப்பிடவேண்டும். உயிரிழப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இருந்து இடம்பெறும் அனைத்து மரணப் பரிசோதனைகளையும் புதிய இறப்புச் சான்றிதழ்களில் குறிப்பிடுதல் வேண்டும் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# ஓட்டோ - லொறி விபத்து இளம் தம்பதியர் சாவு!



கொழும்பு, ஜூலை 23

கொழும்பு, கடுவெல பிரதேசத்தில் ஓட்டோவுடன் லொறி மோதி விபத்துக்குள்ளானதில் இளம் தம்பதியர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 27 வயதுடைய கணவனும், 25 வயதுடைய மனைவியுமே சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். ஓட்டோச் சாரதி படுகாயங்களுடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லொறியின் சாரதியைக் கைதுசெய்த பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிளாலி புனித யாகப்பருக்கு நாளைமறுதினம் திருவிழா!

கிளாலி புனித யாகப்பர் ஆலயத்தின் திருவிழாத் திருப்பலி நாளைமறுதினம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. நாளை மாலை 5 மணிக்கு நற்கருணைத்திருவிழா இடம்பெற்று, மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனிதரின் ஆசிர் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-63)

## ஆடிப்பிறப்பும் மகளிர்தின நிகழ்வும்

கொடிகாமம், ஜூலை 23

சாவகச்சேரி பிரதேசசபையின் ஆடிப்பிறப்பு நிகழ்வும் மகளிர் தின நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சமூகசேவைத் திணைக்களப் பணிப்பாளர் செ.அகல்யா, தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பொதுநிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி, கொடிகாமம் கிராமிய சித்த மருத்துவமனை மருத்துவர் திருமதி றஜிதா கனகசுந்தரம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் தலைவர்களுடன் பேசி தமிழருக்கு எதுவும் கிடைக்காது!

## விக்னேஸ்வரன் எம்.பி. கவலை

**கொழும்பு, ஜூலை 23**

**சிங்களத் தலைவர்களுடன் பல வருடங்களாகக் கலந்துரையாடிய போதும் இறுதியில் தமிழ்ச் சமூகத்துக்கு எதுவும் கிடைக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவினர் சென்றிருந்த போதும் ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம் தொடர்பிலேயே கலந்துரையாடினார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் அதிகாரப் பகிர்வையே விரும்புகின்றனர் என்று வலியுறுத்தியபோது அதற்குத் தேவையான கட்டளைச் சட்டங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அதிகாரங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன் - என்றார். (எ-இ)

# பிரமிட் திட்ட மோசடி: சொகுசுக் காருக்குத் தீ

கொழும்பு, ஜூலை 23

பிரமிட் திட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறப்படும் ஒருவருக்குச் சொந்தமான சொகுசுக் காரொன்று ஹங்கம பிரதேசத்தில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் குறித்த நபரின் பிரமிட் திட்டத்தில் பணம் வைப்புச் செய்துள்ளனர். இருப்பினும் கொடுப்பனவோ பணமோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் ஆத்திரமடைந்தோர் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகித்துள்ளனர். (ச-இ)

# விபுலானந்தர் நினைவு வவு.வில் கடைப்பிடிப்பு



உலகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படும் சுவாமி விபுலானந்த அடிகளின் 76 ஆவது நினைவுதினம் வவுனியாவில் கடந்த புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், நகரசபைச் செயலாளர் உட்படப் பலர் பங்கேற்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (ச-ரி-18)

# மாஞ்சோலை மருத்துவமனைக்கு இதயநோய் சிகிச்சைப் பிரிவு

முல்லைத்தீவு, ஜூலை 23

கனடாவில் வசிக்கும் செந்தில் குமரன் நிவாரணத் திட்டத்தில் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனைக்கு இதயநோய் சிகிச்சைப் பிரிவு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் திறப்பு விழா முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் கனகசபாபதி வாசுதேவா தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸ் பிரதம அதிதியாகப் பங்கேற்று இதயநோய் சிகிச்சைப் பிரிவு பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து சிரேஷ்ட இருதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஸ்மன் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (ச-இ)

# 30 ஆண்டுகளாக மாறாத பல்கலைக்கழக அனுமதி

## எண்ணிக்கை உயர வேண்டும் என்கிறார் மன்னார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

மன்னார், ஜூலை 23

மன்னாரில் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்கிடைத்த பல்கலைக்கழக அனுமதியே இன்றும் எமக்குக் கிடைக்கின்றது. மன்னார் மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி உயர்த்தப்படவேண்டும் என்று மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உயர்கல்வி கற்கும் சமுர்த்திப் பயனாளிகளின் 331 மாணவர்களுக்கு 'சிப்தொர' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குப் புத்தகம் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சிப்தொர' புலமைப்பரிசில் திட்டத்தில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 331 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தால் எமது மாவட்டத்தில் அதிகமான மாணவர்கள் தங்கள் உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் 500 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்க இந்தத் திட்டம் வழிசமைத்துள்ளது. கல்விக்குச் செய்யப்படும் முதலீடு என்றும் அழியாச் சொத்தாகும். எமது மாவட்டத்தில் ஆரம்ப காலத்தில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரிவுகளுக்கு 50 வரையான மாணவர்களே கல்வி கற்றிருப்பர். தற்பொழுது 250 மாணவர்களுக்கு மேல் இந்தக் கல்வியைப் பெறுகின்றனர். ஆனால் எமது மாவட்டத்துக்குக் கிடைக்கும் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் செல்லும் அனுமதி கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் கிடைத்த எண்ணிக்கையே இன்றும் கிடைக்கின்றது. ஆகவே பல்கலைக்கழகத் [illegible] மன்னாரில் அதிகரிக்கப்பட வேண்டும் - என்றார். ([illegible])

# கலையரங்கு திறப்பு!

கிளிநொச்சி, ஜூலை 21

கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் அமரர் சின்னத்தம்பி நடேசபிள்ளை ஞாபகார்த்தமாக, 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆருக்ஷ்கிருத்திக் கலையரங்கம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்று கலையரங்கைத் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் த.ஜோன் குயின்ரஸ் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் கி.ச.கிருஷ்ணேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-113)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. தெய்வ வழிபாட்டால் அல்லல்கள் நீங்கும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை வேண்டும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செய்யுங்கள் இல்லையேல் ஒதுங்குங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நிறைவடைந்திருக்கின்றது. ஆனால் இந்தச் சந்திப்பில் தமிழ் அரசியல் பரப்பில் உருவாக்கப்பட்ட பரபரப்பைப்போன்று அந்தச் சந்திப்பில் சாதகமான அம்சங்கள் எதுவும் தமிழர்களுக்கு இல்லை. தமிழ்க் கட்சிகள், சிவில் சமூகத்தினர் என்று பல தரப்புகளும் ஏட்டிக்குப் போட்டியாக இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை அனுப்பியிருந்தாலும் அவை எந்தவொரு தாக்கத்தையும் மோடி – ரணில் சந்திப்பில் ஏற்படுத்தவில்லை. இந்தியா வழமை போன்று இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதைக்கூறி வருகின்றதோ அதையே மீண்டும் அட்சரம் பிசகாமல் ஒப்புவித்திருக்கின்றது. அந்த நாட்டின் கொள்கை நிலைப்பாட்டில் தமிழ்த் தரப்புக் கடிதங்களால் மாற்றமேதும் ஏற்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

'இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் பற்றிய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை இந்தியா கொண்டுள்ளது. சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மறுசீரமைப்பு செயல்முறையை முன்னெடுத்துச் செல்லும் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என நம்புகின்றேன்' என்று இந்தியப் பிரதமர் நநேந்திரமோடி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இலங்கை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையிழப்பாலேயே இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் அது தொடர்பில் கிஞ்சித்தும் கவனம் செலுத்தாத இந்தியப் பிரதமர் மோடி, மீண்டும் இலங்கை அரசாங்கத்தை நம்புவதாகத் தெரிவித்திருப்பதானது , நமது தமிழ்க் கட்சிகள் வரைந்த கடிதத்தின் பெறுமதியின் லட்சணத்தைச் சொல்லி நிற்கின்றது.


இந்தியா தனது பிராந்திய நலன்களை நிறைவேற்றிக் கொள்ளட்டும். அதற்காக 36 ஆண்டுகளாக தமிழ் மக்களை பலிக்கடாவாக்கிக்கொண்டிருக்கக்கூடாது. தமிழர் பிரச்சினை இருந்தால்தான் இலங்கை விவகாரத்தில் தலையிடலாம் என்பதற்காக அதைத் தீராமல் பார்த்துக்கொள்வது போல இந்தியாவுக்கும், சீனாவின் தலையீடு இருப்பதுபோல் காண்பித்து இந்தியாவை மிரட்டி காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் இலங்கைக்கும் இடையில் சிக்கி அழிந்துகொண்டிருப்பது என்னவோ இலங்கைத் தமிழர்கள்தான். இலங்கையின் காலைப்பிடித்து தொங்கிக்கொண்டிருக்கும் இந்தியாவால் தமிழர்களுக்கு எதுவும் முன்னேற்றகரமாக அமையப்போவதில்லை. தமிழர்கள் விவகாரத்தில் வேறு எந்தவொரு தரப்பும் அணுகாதவாறு நந்தி போன்று குந்திக்கொண்டிருக்கும் இந்தியாவினால், மாற்று அணுகுமுறை குறித்து யோசிக்காமல் இருக்கும் தமிழ்த் தலைவர்களாலும் தொடர்ந்தும் துன்பப்பட்டுக்கொண்டிருப்பது என்னவோ அப்பாவித் தமிழ் மக்கள்தான்.

இனியும் இந்தியாவை நம்பி கடிதங்களை எழுதிக் கொண்டு காத்திராமல் அடுத்த கட்ட நகர்வு குறித்து தமிழ்த் தலைவர்கள் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டும். இந்தியா தமிழர் தேசத்தின் பொருளாதார நலன்களையும் உறிஞ்சுவதற்குத் தயாராகிவிட்டது. தமிழர் தேசத்துக்கு அபிவிருத்தி முக்கியம்தான். அந்த அபிவிருத்தி தமிழ் மக்களுக்கானதா? இந்தியாவின் நலன்களுக்கானதா? என்ற கேள்விக்கான பதிலில்தான் இந்தியா எவ்வளவு தூரம் தனது பிராந்திய நலனை தமிழர் தேசத்திலும் விரிவாக்கியிருக்கின்றது என்பது தெரியவரும். தன் பாதுகாப்புக்காக இந்தியா தனது பிராந்திய நலன்களை உறுதிப்படுத்தட்டும். ஆனால் அதற்குப் பதிலாக தமிழ் மக்களுக்கு தீர்க்கமான – ஒற்றையாட்சி அரசமைப்புக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வைப்பெற்றுத் தரட்டும். அப்படித் தீர்வைப் பெற்றுத்தர முடியாவிட்டால் தமிழர் விவகாரத்தில் நந்தி போன்று குறுக்காக நிற்காமல் இந்தியா ஒதுங்கிக் கொள்வதே எமக்குச் செய்யும் பெரும் புண்ணியம். அதைவிடுத்து வைக்கோல் பட்டறை நாய் போல இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வலிய மூக்கை நுழைத்து, எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது ஒரு வல்லரசுக்கு அழகல்ல.

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தைத் தொடங்கி வைக்கிறான். வாசகன் அதனை முடித்து வைக்கிறான்"

– சாமுவேல் ஜோன்சன்




# இளையோரை நல்வழிப்படுத்த ஒன்றிணைந்து செயற்படுங்கள்

## வடமாகாண ஆளுநர் அழைப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**மாணவர்கள் மற்றும் இளையோரை நல்வழிப்படுத்துவதற்கான வழிகளை ஏற்படுத்துவதற்கு பாடசாலைகள், பிரதேச மற்றும் கிராமியமட்ட அமைப்புக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தத் தரப்புக்கள் குழுவாக இணைந்து செயற்படும்போது இலகுவில் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சிறுவர், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அலுவலர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அண்மையில் விசேட கலந்துரையாடலொன்றை முன்னெடுத்தார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், கைத்தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மீதான அதீத நாட்டம், இளவயது திருமணம், சிறுவர் பராமரிப்பின்மை, பாடசாலை இடைவிலகல் முதலிய பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டுள்ளன. (ச-20)

## மூன்று வருடத்தில் மட்டும் விபத்துகளில் 7,172 பேர் பலி



கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021 மற்றும் 2022) வீதி விபத்துகளில் 7 ஆயிரத்து 172 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்த மூன்று ஆண்டுகளிலும் 67 ஆயிரத்து 687 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டு வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 515 பேரும், 2021ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 513 பேரும், 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 144 பேரும் உயிரிழந்துள்ளனர். (ம-22)

## இடைத்தங்கல் விமான சேவை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, ஜூலை 23

ஒக்ரோபர் 15 ஆம் திகதி முதல் கொழும்பு- யாழ்ப்பாணம்- சென்னை இடைத்தங்கல் விமான சேவை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண விமான நிலைய முகாமையாளர் அனுரா ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் நன்மை கருதியே இந்தத் திட்டம் தொடர்பில் ஆலோசிக்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)

| நாளை | 24.07.2023 திங்கட்கிழமை ஆடி 08 | சுபநேரம் : 12.02 - 01.32 ராகுகாலம் : 07.32 - 09.02 |
| --- | --- | --- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனங்களுக்கான கணக்குகளைத் தயாரித்தல்

சகலவிதமான நிறுவனத்திற்கான கணக்குகளை தயாரித்தல், நிறுவனத்திற்கான சகலவிதமான கணக்குப் பதிவியல், அறிக்கைகளை தயாரித்தல், சந்தேகமான கணக்குகளை ஆராய்தல் வரி தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற தேவைகளை தரமான முறையில் நிபுணத்துவம் பெற்றவர்களால் செய்து தரப்படும். 076 776 3517

shanmuganathans1051940@gmail.com

## காணி விற்பனைக்கு


கோண்டாவில், பலாலி வீதியில் இருந்து
100m தூரத்தில் 17 பரப்பு குளி
17.3 காணி விற்பனைக்குண்டு.
வீடு கட்டுவதற்கு, களஞ்சியசாலை,
நிறுவனங்களுக்கு உகந்த இடம்.

(CS/51250)AH-1

**076 821 9414**


## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 01 . 1957



உதிர்வு 21 . 07 . 2023

### திரு.வேலுப்பிள்ளை ஸ்ரீதரன்

(ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம், தென்மராட்சி, வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கில பாடஇணைப்பாளர் - வடமாகாணம், பகுதி நேர விரிவுரையாளர் ஆங்கிலம் - யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் - அறிவியல்நகர்)

மடத்தடி. கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை ஸ்ரீதரன் அவர்கள் கடந்த (21.07.2023) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை ஆசிரிய தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி நாகரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகனும், கமலாம்பிகை (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் -தென்மராட்சி) அவர்களின் அன்புக் கணவரும், றம்யா (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை), கிறீடி (கட்டடப் பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன் (ஓய்வுநிலை விரிவுரையாளர் ஆங்கிலம்) மற்றும் காலஞ்சென்ற கலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2023) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:077 5141 594

(CS 25587) A-1

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 01 . 02 . 1955



ஆண்டவன் அடியில் 21 . 07 . 2023

### திருமதி பிறேமச்சந்திரன் லங்காதேவி

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமச்சந்திரன் லங்காதேவி அவர்கள் கடந்த (21.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், பிறேமச்சந்திரன் அவர்களின் காதல் மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், வசந்தலா (கனடா), சந்திரகலா, பிரபாகர், வற்சலா (ஜேர்மனி), பிரஜாந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரன் (கனடா), ரவீந்திரகுமார், கேமமாலினி, கலைச்செல்வன் (ஜேர்மனி), கனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அருஸ், கமிதா, அபிரா (கனடா), சதுஜா, திவ்யா, பவின், பிரதீனா (ஜேர்மனி), பிரதீஷா (ஜேர்மனி), மேகஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்னலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி, தனலட்சுமி (கனடா), சத்தியமூர்த்தி (கனடா), ஜெயலட்சுமி, கிருஸ்ணமூர்த்தி, தெட்சணாமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.07.2023) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 077 320 7834
076 245 6244

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25608) A-1



பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன வடக்கு மாகாணத்தின் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுடனும் கிளிநொச்சியில் நேற்று முக்கியமான கலந்துரையாடல் நடத்தினார். (ஒ-113)


(தரகர்கள் வரவேற்கப்படுகிறார்கள்)

**A9 பிரதான சாலை முன் நிலம்**
**12 பரப்பு தேவை**

(வெறும் காணி நிலம் அல்லது நிலத்துடன் கூடிய வீடு)
மாத வாடகைக்கு தேவை

யாழ் நகரிலிருந்து 7கிமீ தொலைவில் யாழ்ப்பாணம் ஏ9 பிரதான வீதியில் முகப்போடு 12 பரப்பு காணி அல்லது வீடுடன் கூடிய காணி நீண்ட கால குத்தகைக்கு தேவைப்படுகிறது. ஏதேனும் இருந்தால் அல்லது பல்பொருள் அங்காடி நடத்துவதற்கு வீடுகள் இருப்பின் விலைகளை தெரிவிக்கவும்

(தரகர்கள் வரவேற்கப்படுகிறார்கள்)

இடம் உள்ள உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்தவும், புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப்பில் பகிரவும்

**Vajira House Company**
**071 593 3299**




1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையின்

**வஜிரா ஹவுஸ் நிறுவனம்**

23, டீல் பிளேஸ் A , கொள்ளுபிடி

Mr. டைரோன் மேலாளர்


## மரண அறிவித்தல்



### கந்தையா சின்னத்துரை

யாழ். பலாலி கிழக்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை அவர்கள் கடந்த (20.07.2023) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், சுதா (சுவிஸ்), சுதாகரன் (கனடா), கிருபாகரன் (கனடா), சுதாவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவாகரன் (லண்டன்), தயாகரன் (சுவிஸ்), கெங்காதரன் (கனடா), சுபா (பிரான்ஸ்), சுமதி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்ரமணியம் (சுவிஸ்), சுரேக்கா (கனடா), சிவராணி (கனடா), ரமேஸ் (ஜேர்மனி), மனோகரி (லண்டன்), பாமினி (சுவிஸ்), குமார் (பிரான்ஸ்), அபிராமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்புச் சகோதரரும், பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம், செல்வராசா, திலகேஸ்வரி, அருந்தவமலர் ஆகியோரின் மைத்துனரும், சுரேக்கா, வேல்முருகன், குவேதா, சம்நாத், நிலானி, அனுஷா, கீர்த்திகா, சிந்துஜா, பிரணவன், அபிஷா, சங்கவி, சங்கரன், சங்கீதன், தனுஷ், அனிஸ், அக்சயன், கவீஸ், அகானா, அதீனா, அஸ்விகா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், இளவரசி அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பலாலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:
செல்லம்மா (மகள்) - 077 3052 806
சுப்ரமணியம் (பெறாமகன்) - 077 6525 032

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25605)A-1

# மோட்டர் கள்ளர்களை மடக்கிய ஊரவர்கள்

சாவகச்சேரி, ஜூலை 23

தென்னம் தோட்டத்தினுள் புகுந்து மோட்டரைத் திருடும்போது ஊர்மக்களால் திருடர்கள் இருவர் மடக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளனர். திருடர்களிடமிருந்து இடியன் துப்பாக்கி, இரும்புக் கம்பிகள், கொட்டன்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கச்சாயில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள தென்னம் தோட்டங்களினுள் இரவு வேளைகளில் நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்மோட்டர்கள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கொடிகாமம் பொலிஸாரிடம் முறையிட்டும் திருட்டைத் தடுக்கமுடியவில்லை. இதனையடுத்து ஊர் மக்கள் இரவு நேரத்தில் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு தோட்டத்தினுள் இருவர் நுழைவதை அவதானித்துள்ளனர். உடனடியாக இரவு காவல் கடமையிலிருந்த ஏனையோரையும் அந்தத் தோட்டத்துக்குள் அழைத்துள்ளனர். திருடர்கள் இருவரும் மோட்டரைக் கழற்றிக்கொண்டிருந்தபோது ஊரவர்கள் சுற்றி வளைத்து கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வருவதற்கிடையில் ஒருவர் தப்பித்துச் சென்றுள்ளார். மற்றையவரை பொலிஸாரிடம் மக்கள் ஒப்படைத்துள்ளனர்.

கொடிகாமப் பொலிஸார் அவரை நீதிமன்றில் நாளை திங்கட்கிழமை முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (ஒ-9)


## வேலையாட்கள் தேவை [பெண்]

யாழ். நகரில் இயங்கும் பான்சி கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 077 132 4319

வீட்டுத் தளபாடங்கள்
விற்பனைக்கு இருந்தால்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
077 345 0039
077 348 0039

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாவட்டத்தில் வீடு வாடகைக்கு இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
077 345 0039
077 348 0039

## பெண் வேலையாள் தேவை

யாழ். நகரை அண்டிய வீட்டிற்கு வேலை ஆள் தேவை. தங்கி நிற்பவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

T.P:074 310 9487

## யாழ். நகரில் வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் வீடுகள், கடைகள், களஞ்சிய சாலைகள் மற்றும் படிக்கும் மாணவர்களுக்கான தனி அறைகள், நாளாந்த, வாராந்த, மாதாந்திற்கான நவீனமயமான வீடுகள், அறைகள் திருமண நிகழ்வுகள், பூப்புனித நீராட்டு விழா போன்ற சுப காரியங்களுக்கு ஏற்ற இடமும் எம்மிடம் வாடகைக்கு உண்டு.
077 345 0039
077 348 0039


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

இன்னோர் தளத்தில் அது கட்டித்த திரவப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை ' என்ற பழமொழியில் அதன் பொருள் கட்டித்த திரவத் தன்மையுடைய, பிசுபிசுப்பான, ஒட்டக்கூடிய பதார்த்தம் என்றே பொருள்படுகிறது. சாமை, கேழ்வரகு , கம்பு, ஒடியல் முதலியவற்றின் மாவினால் உருவாக்கப்படும் அவ்வாறான பதார்த்தங்கள் கூழ் என்ற பின்னோட்டுடனே இன்றும் தமிழகக் கிராமங்களிலும் இலங்கையின் வட புலத்திலும் நிலவி வருகின்றன.

பழமொழிகள் கூழ் என்ற உணவுப் பண்பாட்டின் பல்வேறு ஒழுங்குத் தளங்களையும், கருத்து நிலைகளையும் பழமொழிகள் நமக்கு விபரிக்கின்றன. ஒரு மொழிப்பண்பாட்டின் மிக முந்திய இலக்கிய ஆக்கங்கள் என்ற வகையில் சமூக அனுபவங்களை அவை பிரதிபலிப்பன என்ற வகையிலும் பழமொழிகளுக்கு முக்கியமான இடம் உண்டு. கூழ் சுவையான பதார்த்தம் என்ற வகையில் பல பழமொழிகள் அமைந்துள்ளன.

**"கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம்; குரங்குக்கு தேங்காய் கொண்டாட்டம் "**

**" கூழுக்கு கொறடா மிளகாய்"**

**"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை"** என்ற பழமொழியின் மறைமுக கருத்து வேறாயினும் அதன் பதார்த்தத் தன்மையினை இது குறிப்பிடுகின்றது.

**'கூழாயினும் குளித்து குடி கந்தையானாலும் கசக்கிக் கட்டு '** என்ற பழமொழியில் சுகாதாரம் பேசப்பட்ட போதும் கூழாயினும் என்ற பதம், இழிவு உம்மையாகி கூழை மிகவும் இழிவான உணவாகக் கருதப்பட்ட நிலைமையும் வெளிப்படுத்தப்படுகின்றது. இது போலவே ,

**'குடிக்கிறது கூழ் ;கொப்பளிக்கிறது பன்னீர்'**

**'குடல் கூழுக்கு அழுகின்றது; கொண்டை பூவுக்கு அழுகின்றது'**

என்ற பழமொழிகள் உணர்த்தும் பொருள் வேறாயினும் அதன் நேரடித் தன்மையில் கூழ் என்பது மிகவும் எளிமையான உணவு என்ற வகையில் விளங்கியதை உணர முடிகின்றது.

**'அறப்படிச்ச பல்லி கூழ் பானையில் விழுந்ததாம் '**

என்ற மெத்தப் படித்தவர்கள் தவறு செய்யும் போது ஏளனத் தொனியில் சொல்வதாக இந்தப்பழமொழி அமைகிறது. இதுவும் கூழ்ப் பானை என்ற சொல் மூலம் மீள முடியாத கீழ்த்தரமான இழிவான என்ற பொருள் கோடலையே கொள் வைக்கின்றன. எனவே நாட்டு புறவியல் அனுபவச் சொல்லடைகளில் கூழ் என்ற உணவின் தொடர்பாகப் பழக்கம் நிகழ்ந்துள்ளது என்பதும் அது உணவு, கட்டித்த திரவப் பதார்த்தம், மிகவும் எளிமையான உணவு என்ற வகையிலும் நிலவி வந்ததை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் இலக்கியங்களில் இந்த 'கூழ்' பற்றிய செய்தியைப் பரவலாக அறிய முடிகின்றது .'கூழ் அட்டுதல்' நிகழ்வு பற்றிப் புறநானூற்றுப் பாடல் சிறு செய்தியொன்றைத் குறிக்கின்றது. போர்க்களத்தில் கூழ் அட்டும் நிகழ்வாக அது அமைகின்றது. (பாடல் புறம் - 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தொடர்ச்சியாகப் புறப்பொருள் வெண்பாமாலையும் அடுகளத்தில் கூழ் அட்டும் செய்தியைப் பதிவு செய்கிறது.

**'காடு கெழு செல்விக்குக் கூழும் துணங்கையும் படைத்து வழிபடுதல்'** என்ற மரபை கலிங்கத்துப்பரணி விரிவாக விஸ்தாரம் செய்கின்றது. கலிங்கத்துப்பரணியில் களம் பாடியது என்ற பகுதியில் (செய்யுள் 504-582) குலோத்துங்க சோழனின் படைத்தளபதியான கருணாகரத் தொண்டமான் கலிங்கத்தில் நிகழ்த்திய போரின் பின் பேய்கள் போர்க்களத்தில் கூழ் காய்ச்சி அருந்திக் கொண்டாடிய செய்தி பேசப்படுகின்றது.

கூழ் என்ற உணவு இப்போது சடங்கு நிலையில் தெய்வத்துடன் தொடர்புபடுத்தியும் பேசப்படுவதை அவதானிக்கலாம். அதாவது காளியின் (காடு கெழு செல்வி) ஜன்ம நட்சத்திரம் பரணி, அந்தப் பரணியில் அவளுக்கு கூழும் துணங்கையும் படைத்துச் சடங்கு நிகழ்த்துதல் என்ற செய்தி பேய்கள் கூடி , கூழ் அட்டும் நிகழ்வும் பேய்களின் பசி தீர போர்க்களத்துக்கு அவைகளை அனுப்புதலும், கூழ் குடித்த குதூகலத்தில் பேய்கள் குலோத்துங்கனையும் காளியையும் வாழ்த்துவது என்பது, இங்கே சடங்கு நிலையில் கூழ் தெய்வத்துடன் தொடர்புபட்ட நிலையை அவதானிக்கலாம். தமிழில் எந்த பரணிப்பிரபந்தங்கள் பலவும் இந்தக் கூழ் அட்டுதல் நிக்ழ்வை மிகவும் விரிவாகப் பேசுகின்றன என்பதும் மனங்கொள்ளத்தக்கது. இதனடியாக இரு நிலைப்பட்ட கருத்துக்களை உருவாக்க முடிகின்றது. ஒன்று பயில் நிலையில் உள்ள ஒரு செயற்பாட்டை இலக்கியமாக்கியது. மற்றையது அதனைச் சடங்கு நிலைப்படுத்தித் தெய்வத்துடன் தொடர்புபடுத்தியது என்பவையே அவையாகும்.

## தனிப்பாடல் ஔவை கூழ்

தனிப்பாடல் திரட்டுக்களின் வழி , கூழ் பற்றிய சில தகவல்களை அறிய முடிகின்றது. குறிப்பாக ஔவையார் பற்றிய பாடல்களில் இது இடம்பெறுகின்றது. நமது சிறார்களுடைய பிள்ளைப்பாடல் ஒன்றில்

**"ஔவைக் கிழவி நங்கிழவி**
**அமிழ்தினும் இனிய சொற் கிழவி..."**

என்று தொடங்கும் பாடலில்

**"கூழுக்காக கவி பாடும்**
**கூனற் கிழவி..."**

என்று அவள் பேசப்படுகின்றாள். இக்கூற்று தனிப்பாடல் திரட்டின் வழியாகக் கட்டமைக்கப்பட்ட செய்தியாகும்.

*(மிகுதி அடுத்தவாரம்)*



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தனியார் கல்வி நிலையங்கள்

# மீதான கட்டுப்பாடும் தராசுக் கோட்பாடும்



(சென்றவாரத் தொடர்ச்சி)

கடந்த வாரம் இந்தக் கட்டுரை நிறைவுறும் போது தராசுக் கோட்பாட்டின் பிரகாரம் தனியார் கல்வி நிலையங்களினால் மாணவர்களின் சமநிலை விருத்தியில் ஏற்படும் தாக்கத்தை சீர்செய்யும் பொறுப்பையும் தனியார் கல்வி நிலையங்களிடமேசுமத்துவது தொடர்பாகச்சிந்திக்கவேண்டும் எனும் ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டது. இந்தக் கருத்தியல் எழுந்தமானத்தில்நடைமுறைச் சாத்தியமா எனும் கேள்வியை எழுப்பினாலும் சற்று ஆழமாகச் சிந்திக்கும் போது சாத்தியமானதே என்பது விளங்கக்கூடியதாகவிருக்கும். சற்றுப் பின் நோக்கி எமது அனுபவங்களின் வழி சிந்தித்தால் எமது இளைய தலைமுறையினரின் ஆளுமை விருத்தியில் அவர்கள் கல்வி கற்ற தனியார் கல்விநிலையங்களின் பங்களிப்பும் இருந்திருக்கின்றது என்பதை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ள முடியும். இற்றைக்கு இரு தசாப்தங்களுக்கு முன்னர் இருந்த தனியார் கல்வி நிலையச்சூழலுக்கும் தற்போதைய தனியார் கல்வி நிலையச் சூழலுக்கும் இடையே நிறையவே வித்தியாசங்கள் உண்டு.

யாழ்ப்பாணக் கல்விச் சூழலில் தனியார் கல்விநிலையங்கள் கொண்டுள்ள அல்லது கொண்டிருந்த வகிபாகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. கிராமங்களை மையப்படுத்திய பல தனியார் கல்வி நிலையங்கள் தான் அந்தக் கிராமத்தின் இளைய தலைமுறையினர் ஒன்றுகூடும் இடமாகவும் கூடிவிளையாடும் இடமாகவும் இருந்திருக்கின்றன. பாடசாலைக் கல்விக்காக வெவ்வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் ஒரே கிராமத்து மாணவர்கள் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புகளையும் தனியார் கல்வி நிலையங்கள் தான் வழங்கியுள்ளன. குறிப்பாக ஒரு பால் பாடசாலைகளில் கற்கும் கட்டிளமைப்பருவப் பிள்ளைகளின் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பெரும் உளவியல் சிகிச்சைக் கூடங்களாக அல்லது உணர்வு வடிகால்களாக இருந்தவை தனியார் கல்விநிலையங்கள். இன்றும் அவ்வாறானதொரு ஆரோக்கியமானதொரு நிலமை நிலவுகின்றதா என்பதை ஆய்வு அவதானங்களுக்குப் பின்னரே முடிவுசெய்யலாம். அதுபோன்று மதச் சார்பினை வலுவாகப் பின்பற்றும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது மதம் சார்ந்த விழுமியங்களைப் பின்பற்ற விழாக்கள் வழி வாய்ப்புகளை தனியார் கல்வி நிலையங்கள் வழங்கியமையும் ஒரு முக்கியமானதொரு பங்களிப்பாகக் கருதமுடியும். அதனைத் தாண்டி மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றல், சமூகப் பற்றுணர்வு மேம்பாடு என்பவற்றிலும் தனியார் கல்வி நிலையங்கள் கொண்டிருந்த வகிபாகம் பெரிது. யாழ்ப்பாணச் சூழலில் தனியார் கல்வி நிலையங்களில் மட்டும் கற்பித்து ஆசிரிய மாண்புணர்வை தம் மாணவர்கள் மத்தியில் தலைமுறை கடந்தும் தக்க வைத்த பல ஆசிரியர்கள் இருந்துள்ளனர். ஆனால் இன்று அவ்வாறான நிலைமைகள் சற்றுக் குறைவே. காரணம் தனியார் கல்வி நிலையங்களும் வகுப்பறைகளுக்கு வெளியே ஆசிரிய மாணவ உறவை மேம்படுத்துவதில் பின்னடைவுகளைச் சந்தித்துவருகின்றன.

தனியார் கல்வி நிலையச் சூழலில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களுக்கு பல காரணங்கள் உண்டு. காலங்கள் கடந்திருக்கின்றன என்பதைத் தாண்டி எமது வாழ்வியல் ஒழுங்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள், எதிர்பார்ப்புக்களின் வேறுபாடு, சூழலில் ஏற்பட்ட பல்வேறு பின்னடைவுகள் மற்றும் முன்னேற்றங்கள் என்பன அனேக விடயங்களைப் பாதித்தது போல தனியார் கல்விநிலையங்களையும் பாதித்திருக்கின்றன. அதுமட்டுமன்றி பொருளீட்டும் மையங்களாக தனியார் கல்வி நிலையங்கள் மாறத்தொடங்கியதன் பின்னர் அவை முற்றுமுழுதாக ஒரு வணிகமயப்படுத்தப்பட்ட சூழலுக்குள் தம்மைச் சுருக்கி விட்டன. வணிகமயப்படுத்தப்பட்ட சூழலின் தவிர்க்க முடியாத விதிகளினால் சிக்குப்பட்ட நிலையிலேயே தனியார் கல்வி நிலையங்கள் இன்று மாணவர் விருத்திக்குச் சவாலான மையங்களாக கருதப்படும் சமூக நோக்கு நிலை உருவாகியிருக்கின்றது.

வணிக நிலையங்கள் தமது இலாப நோக்கம் கருதி தமது வாடிக்கையாளர்கள் வேறு இடங்களுக்குச் செல்லாதிருப்பதை உறுதிசெய்ய பல்வேறு உபாயங்களை வகுப்பதுண்டு. இவ்வாறான உபாயங்களை தனியார் கல்வி நிலையங்கள் பலவும் தற்போது வகுப்பதை உற்று அவதானிக்கும் போது புலனாகின்றது. இவ்வாறான உபாயங்களுக்குள் சமூக அபாயத்தை விளைவிக்கும் உபாயமாக அமைபவை தனியார் கல்வி நிலையங்களின் நேர அட்டவணைகள். தம்மிடம் இணைந்துள்ள பிள்ளைகள் வேறு இடங்களை நாடாதிருப்பதற்கு அவர்களின் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரம் முழுவதையும் தம்முடன் செலவழிக்கத்தக்க விதத்திலான நேர அட்டவணை உபாயங்களையும் அவற்றை அடையத்தக்க கட்டுப்பாடுகளையும் பல தனியார் கல்வி நிலையங்கள் கைக்கொள்கின்றன.

**தனியார் கல்விநிலையங்களினால் கொள்ளையிடப்பட்ட பெரும்சொத்தான இளையவர்களின் நேரத்தை காப்பாற்றி கொடுத்தமை பாராட்டத்தக்க முயற்சி என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அவ்வாறு மீதப்படுத்திக்கொடுப் பப்பட்ட ஏறக்குறைய 15 மணித்தியாலப் பகல் பொழுது நேரத்தை எதிர்காலத்துக்கு பயன்விளைவிக்கத்தக்கதாக செலவழிப்பது என்பது குறித்து மாணவர்கள் சரியாக வழிப்படுத்தப்படவேண்டும். மாறாக வழங்கப்பட்ட நேரத்தை முறையற்றுப் பிள்ளைகள் பாவிப்பார்கள் எனில் தற்போதைய நெருக்கடி நிலையிலும் மேலும் சிக்கலான நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு**

இவற்றுள் சில வாரத்தின் ஏழு நாள்களும் வகுப்புகளை நடத்துவது, திறமையான ஒரு ஆசிரியரை மையப்படுத்தி ஏனைய பாடங்களையும் தம்மிடமே கற்கப் பணிப்பது, போட்டித் தன்மையினால் மாணவர்களை சிக்கல் நிலைக்குள்ளாக்கும் வகையிலான போட்டி நிறுவனத்துடன் மேற்பொருந்தத்தக்க வகையிலான நேர அட்டவணைகளைத் தயாரிப்பது, பாடசாலை விடுமுறை நாள்களிலும் வகுப்புகளை நடத்துவது, கட்டுப்பாடு எனும் பெயரினால் மாணவர்கள் மீது சில திணிப்புக்களை மேற்கொள்வது என்பன இவ்வாறான உபாயங்களுள் சிலவாகும். இந்த உபாயங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தின் விளைவுகள் தான் இளைய பராயத்தினருக்கு ஏனைய விடயங்களில் ஈடுபட நேரமின்மை உருவாகுவதற்கு காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன. இதனாலேயே எப்பாடுபட்டாயினும் தனியார் கல்வி நிலையங்களின் மீதான நேரக் கட்டுப்பாடுகளை கொண்டுவந்துவிட வேண்டும் என சமூக நோக்கு கொண்ட சமூக மட்டத் தலைவர்களும் அதிகாரிகளும் முயற்சிக்கின்றனர். அத்தகையதொரு முயற்சியின் வடிவம் தான் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் விடுக்கப்பட்ட வெள்ளி மாலை ,ஞாயிறு முழுநாள் கட்டுப்பாடு. ஆனால் இதனை ஏற்றுக்கொள்வதற்கு அனேக தனியார் கல்வி நிலையங்களும் பெற்றோரில் குறிப்பிடத்தக்க பகுதியினரும் தயாராகவில்லை. குறிப்பாக இலங்கை நிர்வாகசேவை அதிகாரியும் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருமாகிய வே.சிவராஜா பகிரங்கமாகவே அரசாங்க அதிபரின் முடிவை பெற்றோர் சார்பில் கேள்விக்குட்படுத்தினார். இந்த முரண்நிலை தான் தனியார் கல்வி நிலையங்கள் மீதான கட்டுப்பாடு தொடர்பான அரசாங்க அதிபரின் முடிவின் நிலைபேண் தன்மையைப் பாதிக்கும் காரணியாக முனைப்புப் பெறுகின்றது. இந்த நிலையை எவ்வாறு கையாளலாம்.

முதலில் வெள்ளிக்கிழமை மாலை மற்றும் ஞாயிறு ஆகிய நாள்களில் இயங்கத் தடைவிதிக்கும் முடிவில் சில தளர்வுகளைக் கொண்டுவரலாம். உதாரணமாக முதலாம் ,மூன்றாம் வெள்ளி மாலை மற்றும் இரண்டாம் ,நான்காம் ஞாயிறு என்றவாறாக முடிவில் மாற்றத்தைக் கொண்டுவரலாம். இது தனியார் கல்விநிலைய நிர்வாகிகளுக்கும் திருப்தியைக் கொடுக்கத்தக்க முடிவாகும். ஆதலால் இருதரப்பும் இணங்கிச் செயற்பட உருவாகும் வாய்ப்பினால் எய்தத் திட்டமிடும் இலக்குகளை அடையமுடியும். அத்துடன் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படும் நாள்களில் அவற்றின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் குடும்ப மட்டத்திலும் சில உள ஆரோக்கியமான விடயங்கள் நடைபெற வாய்ப்புள்ளமையால் காலப்போக்கில் [illegible] இவ் முடிவு நிலைபேண் தன்மையை நோக்கி நகரலாம்.

அது போன்று திறந்திருக்கும் வெள்ளி மற்றும் ஞாயிறு நாள்களிலும் சில காரியங்களை தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ளமுடியும். குறிப்பாக அறநெறிப் பாடசாலைகள் ஆலயங்களை மையப்படுத்தித் தான் அவற்றின் தாபக ஏற்பாட்டைக் கொண்டிருந்தபோதும் அருகில் உள்ள தனியார்கல்வி நிலையங்களுடன் இணைந்து வெள்ளி மாலை அறநெறிப் வகுப்புகளை குறித்த தனியார் கல்வி நிலையங்களிலேயே நடத்துவதற்கு இரு தரப்பு இணக்கம் மற்றும் பங்குபற்றுதலுடன் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வெள்ளி மாலை தனியார் கல்வி நிலையம் இயங்கும் நேரத்தின் அரைவாசியை அதாவது ஒன்றரை மணிநேரத்தை அறநெறிப் பாடசாலைகள் தமக்காக்கி மாணவர்கள் சலிப்புறாதவண்ணம் அவர்களை தம்பால் ஈர்த்து, தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படும் முதலாம் மற்றும் மூன்றாம் வெள்ளிகளில் ஆலயங்களை நோக்கி மாணவர்களை நகர்த்த முடியும்.

இங்கு ஒரு முக்கியமான சவால் வெளிக்கிளம்பும். அதாவது முன்னர் பாடசாலைக் கல்விக்காக மட்டும் நகரங்களை நாடி வந்த மாணவர்கள் இப்போது தனியார் கல்விக்காகவும் நகரங்களை நாடும் போது குறித்த ஒரு தனியார் கல்வி நிலைய மாணவர்கள் அனைவரையும் குறித்த ஒரு ஆலயம் அல்லது தேவாலயம் நோக்கி நகர்த்த இயலாதிருக்கும். ஆனால் மாணவர்கள் அறநெறி வகுப்பை தனியார் கல்வி நிலையத்தில் பின்பற்றிக்கொண்டு தமது ஊரில் உள்ள ஆலயத்தில் அல்லது தேவாலயத்தில் தனியார் கல்வி நிலையம் மூடப்படும் வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு காலையில் சந்தித்துக் கொள்ள முடியும். இத்தகைய சந்திப்புகள் காலப்போக்கில் பிள்ளைகளின் ஆலயங்கள் மீதான நாட்டத்தை அதிகரிக்க செய்து தாமாகவே ஆலயங்களை நாடும் பழக்கத்தை உருவாக்கும். இளையவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் ஆலயங்களும் தமது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் அண்மையில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்த கருத்துகளை கவனம் கொள்வது மிகவும் அவசியமானதாகும். அவரது உரை ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் கிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ள்ளி மற்றும்
ரியங்களை
ளில் மேற்
நெறிப்பாட
யப்படுத்தித்
ற்பாட்டைக்
கில் உள்ள
ங்களுடன்
அறநெறிப்
யார் கல்வி
வதற்கு இரு
குபற்றுதலு
செய்ய வேண்
யார் கல்வி
அரைவா
ரிநேரத்தை
தமக்காக்கி
வண்ணம்
து. தனியார்
ப்படும் முத
வெள்ளிக
நாக்கி மாண
ும்.

ம். அதாவது
களை நாடி
காகவும் நக
வி நிலைய
ம் அல்லது
னால் மாண
லையத்தில்
பத்தில் அல்
மூடப்படும்
சந்தித்துக்
ப்போக்கில்
அதிகரிக்க
கத்தை உரு
த்தில் ஆல
ள்ள வேண்
அறக்கட்
அவர்கள்
ட்டில் நடை
ருத்துகளை
ம். அவரது
ளில் கிடைக்

கக்கூடியதாகவுள்ளது. அதன் உள்ளடக்கத்தை மீள ஒருதடவை ஆராய்ந்து அணுகுவது பயன்விளைவிக்கும்.

அடுத்த அணுகுமுறை, தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைக் கலைத்திட்டம் மற்றும் பாடதிட்டத்தை அவ்வாறே நூற்றுக்கு நூறு வீதம் பின்பற்றும் நடைமுறையில் மாற்றத்தைக்கொண்டு வருவது அவசியமானதாகும். பாடசாலைகள் நிறைவேற்ற வேண்டும் என நினைத்து வசதிக்குறைவுகளினால் நிறைவேற்ற முடியாது போகும் விடயங்களை தனியார் கல்வி நிலையங்களினால் நிறைவேற்ற முடியும். உதாரணமாக நீச்சல் வகுப்புகள், யோகாசன வகுப்புகள், கைவினைச் செயற்பாடுகளைக் கொண்ட வகுப்புகள், பொதுவெளித் தொடர்பாடல் பயிற்சிகள், மெல்லிசைப்பாடல் பயிற்சி வகுப்புக்கள், இசைக்கருவிப் பயிற்சிகள் என்பவற்றை தனியார் கல்வி நிலையங்கள் , உரிய நிறுவனங்களுடன் இணைந்து தமது நேர அட்டவணைக்குள் கொண்டுவர வேண்டும். அல்லது அந்த நிறுவனங்களின் நேர அட்டவணைகளுக்கு ஒத்திசைந்து இணக்கப்பாட்டுடன் நேர அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும்.

இப்போது மிகவும் முக்கியமானதொரு வினா மேற்கிளம்பும். அதாவது மேலதிகமான இவ் வகுப்புகள் அல்லது பயிற்சிகளுக்கு மேலதிக கட்டணம் அறவிடப்படவேண்டுமே அது மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் மேலதிக நிதிச்சுமையாக அமையுமே என்பது. எடுத்தளடுப்பில் நோக்கும் போது அவ்வாறே தோன்றும். ஆனால் மேலைத்தேயப் பாணி முறையில் அதற்கும் தீர்வுண்டு. அதாவது தனியார் கல்வி நிலையங்கள் மணித்தியால அடிப்படையிலான கட்டண வசூலிப்பு முறைமைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். வாரமொன்றில் அல்லது மாதமொன்றில் மாணவரொருவர் ஒரு தனியார் கல்வி நிலையத்தில் செலவழிக்கும் மணித்தியாலங்களுக்கு ஏற்ப கட்டணம் அறவிடப்பட்டு அந்தக் கட்டணங்களுக்குள்ளேயே பரீட்சை மைய விடயங்களையும் மேற்குறிப்பிட்ட விடயங்களையும் வழங்க வேண்டும். இது நினைப்பதற்கு சவாலானது எனினும் நினைத்தால் சாத்தியமாக்கக்கூடிய விடயமே. ஆனால் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் சிறியளவிலான பொருளாதாரப் பின்னடைவுகளைப் பெரிதுபடுத்தாதிருக்கும் பெருமனதை வெளிப்படுத்தவேண்டியிருக்கும்.

எனவே கூட்டு முயற்சியின் விளைவாக, தனியார் கல்வி நிலையங்களை மூடுவதன் மூலம் அடைய நினைக்கும் முடிவுகளை அவற்றைத் திறந்த நிலையில் அடைவதற்கான மார்க்கங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டிய தேவைப்பாடுள்ளமை தவிர்க்க முடியாததே.



தனியார் கல்வி நிலையங்களுக்கு இயக்க நேரத் தடை போடுவதைவிட வேறு விடயங்களில் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனும் கோரிக்கைகளும் தற்போது எழுப்பப்படுகின்றன. தனியார் கல்வி நிலையங்கள் பேசு பொருளான பின்னர் அவற்றுடன் தொடர்புடைய இட வசதிகள், தனிநபர் சுகாதார வசதிகள், உள நெருக்கீடுகளையும் பொருளாதார சவால்களையும் தரவல்ல கட்டுப்பாடுகள் குறித்து தற்போது பொதுவெளியில் பேசப்படுகின்றன. அண்மையில் பல பெற்றோரின் அபிப்பிராயத் திரட்டாக சமூக ஆர்வலர் த.தவரூபன் தனியார் கல்வி நிலையங்களின் வசதியீனக் குறைவுகள் குறித்து சமூக வலைத்தளத்தில் இட்ட பதிவில் பலரும் தனியார் கல்விநிலையங்கள் மீதான தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். சமூக வலைத்தளப் பாவனையாளர்களாகவிருக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் வடக்கு மாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி.த.சத்தியமூர்த்தி ஆகியோரின் பார்வையிலும் இந்தப் பதிவுகள் தென்பட்டிருக்கக்கூடும். மாற்றங்களைத் தரவல்ல முடிவுகளை அண்மையில் எதிர்பார்க்கலாம்.

இங்கு இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது பாடசாலை விடுமுறை நாள்களையும் தனியார் கல்வி நிலையங்கள் முற்றுமுழுதாக விழுங்கிவிடும் அவலநிலை உள்ளது. இது தொடர்பிலும் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவேண்டும். பாடசாலை விடுமுறை என்பது யதார்த்தமாக மெய்விடுமுறையாக அமையும் பட்சத்தில் பயனுள்ள , கற்றலுக்கு வெளியேயான பல முயற்சிகளை மாணவர்களை மையப்படுத்தி ஆரம்பிக்கமுடியும். விளையாட்டுப் பயிற்சி முகாம்கள், தொடர்பாடல் பயிற்சிகள், வதிவிட தலைமைத்துவப் பயிற்சிகள், இயற்கையை ஆராயும் காடு மலை காண் பயணங்கள் என ஏதும் முன்மாதிரியாக சிந்திக்கவும் செயற்படுத்தவும் முடியும்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட நிறைவு வினாவாகிய தனியார் கல்வி நிலையங்களை மூடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் அடையப்பட்டனவா அல்லது அடைவது சாத்தியமா? என்ற வினாவுக்கான விடைகுறித்து தற்போதைய சூழலில் அழுத்தமாக எதையும் சொல்ல முடியாது. ஆனால் இவ் வினாவுக்காக விடை ஒருபோதும் தீர்க்கமாக 'ஆம்' எனவோ அல்லது இல்லை எனவோ அமையாது என்பது நிச்சயம். காரணம் மாணவர்களுக்கு ஓய்வுநேரம் கொடுக்கப்பட்டால் அவர்களது குடும்ப மற்றும் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப பல விதமாக அந்த ஓய்வு நேரம் செலவழிக்கப்படலாம். சில மாணவர்கள் வீடுகளுக்குள் முடங்கிய வண்ணம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பிடிக்குள் அகப்பட்ட கைதிகளாக மாறலாம். அத்துடன் வாரநாள் பணியாளர்களான பெற்றோர் பலர் வெள்ளி மாலைகளில் பாடசாலைக்குப் பின்னர் தங்கள் பிள்ளைகளுக்கான பாதுகாப்பான இடமாக தனியார் கல்வி நிலையங்களை நம்பிவந்த நிலையில் அத்தகையவர்களுக்கு ஒரு சிக்கல் நிலை ஏற்படலாம். எதிர்பார்ப்பதைப் போல் வெள்ளி மாலை வேளைகளில் மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் ஏற்பாடுகளை இந்தக் கணம் வரை அனேக அறநெறிப்பாடசாலைகளோ ,ஆலயங்களோ கொண்டிருக்கவில்லை. அத்தகைய ஏற்பாடுகளை உடனடியாக ஏற்படுத்துவதும் சாத்தியமற்றது.

மாறாக நிறுவனமயப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் இருந்து விடுதலை பெற்ற மாணவர்கள் மீளவும் முறைசாரா முறையிலான தனியார் வகுப்புகளுக்குள் சிக்குப்படவும் வாய்ப்புண்டு. பாடசாலை மாணவர்களைப் பொறுப்பெடுத்து பராமரிக்கும் கட்டணம் செலுத்தப்பட்ட பகல் பராமரிப்பு நிலையங்கள் எதுவும் இதுவரை வடக்கில் தாபிக்கப்படவில்லை. குறிப்பாக நகரங்களை நோக்கி குடிபெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் நிலமை மிகவும் கவனத்துக்குரியது. இவர்களுள் அனேகமானவர்கள் அயல்வீட்டில் இருப்பவர்களைக் கூட அறியாது வளர்கின்ற அபாயத்துக்குள் உள்ளனர். இந்த நிலையில் சுயஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வாழ்க்கைப் பண்புகளைக் கொண்ட குடும்பத்துப் பிள்ளைகள் தம்மை ஆரோக்கியமான பாதைகளில் இட்டுச் செல்ல வாய்ப்பிருப்பினும் அனேக பிள்ளைகள் தொடுதிரைக் கைதிகளாக மாறலாம்.

அதேவேளை கிராமியப் பின்னணி கொண்ட மாணவர்களுக்கு இம் முடிவு சாதகமானதே. அவர்கள் கூடி விளையாடுவதற்கும் வெள்ளி மாலை கோவில் கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் உள்ளன. அரசாங்க அதிபரின் அறிவித்தலுக்குப் பின்னர் இளம் பிள்ளைகளை இணைத்து கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடும் ஆலயங்கள் தொடர்பான சில பதிவுகளையும் காண முடிந்தது. இத்தகைய ஆலயங்களும் நீண்ட காலமாகத் தாம் பின்பற்றி வந்த வழிபாட்டில் இளையவர்களை உள்ளீர்த்துள்ளனர் என்பதே உண்மைநிலை. ஆனாலும் இவ்வாறான முயற்சிகள் முன்மாதிரிகளாகக் கொள்ளப்படவேண்டும். கிராம மட்ட தனியார் கல்வி நிலையங்களே தாமே முன்வந்து இத்தகைய கூட்டுப் பிரார்த்தனை, ஆலய சரியைத் தொண்டு, சமூக மட்ட சிரமதானப் பணிகள் என்பவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தலாம். இருந்தும் பிறரால் வகுக்கப்பட்ட சட்டகத்துக்குள் மாணவர்களை அழுத்தி நுழைப்பதை விட அவர்கள் தாமாகவே அமைத்துக்கொள்ளும் சட்டகமே அவர்கள் ஆளுமை விருத்திக்கு பயன்செய்யத்தக்கது. இதற்கேற்ற வழிகாட்டல்கள் அவசியமானவை.

நிறைவாக, தனியார் கல்விநிலையங்களினால் கொள்ளையிடப்பட்ட பெரும்சொத்தான இளையவர்களின் நேரத்தை காப்பாற்றிக் கொடுத்தமை பாராட்டத்தக்க முயற்சி என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அவ்வாறு மீதப்படுத்திக்கொடுக்கப்பட்ட ஏறக்குறைய 15 மணித்தியாலப் பகல் பொழுது நேரத்தை எதிர்காலத்துக்கு பயன்விளைவிக்கத்தக்கதாக செலவழிப்பது என்பது குறித்து மாணவர்கள் சரியாக வழிப்படுத்தப்படவேண்டும். மாறாக வழங்கப்பட்ட நேரத்தை முறையற்றுப் பிள்ளைகள் பாவிப்பார்கள் எனில் தற்போதைய நெருக்கடி நிலையிலும் மேலும் சிக்கலான நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். சமூகத்தின் அத்தனை தரப்பினரும் கூட்டாகக் கைகோர்த்துச் செயற்படவேண்டும். தராசுக் கோட்பாடு முன்வைப்பதைப் போல் நம்மால் பாரத்தைக் குறைக்க முடியாத பக்கம் கவனம் செலுத்துவதை விடுத்து பாரத்தை அதிகரிக்க வேண்டிய பக்கம் கவனம் செலுத்துவதே இளையவர்கள் தொடர்பில் மட்டுமல்ல வடக்கின் அனேக விடயங்களிலும் எதிர்பார்க்கப்படும் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான இதுவே வழியாகும்.



# தோல்வியே தோற்றுப் போ

தோல்வியே தோல்வியே
தோற்றுப் போ

தோல்விக்குப் பயந்தவன்
நான் அல்ல

தோல்வி கண்டு
துவழ்வேன் என்றாயா

தோல்வி கண்டு
வெல்வேன் பார்

தோற்பவன் எல்லாம்
வீழ்பவன் அல்ல

தோல்விக்குப் பின்னால்
வெற்றி நிச்சயம்

தோல்விகள் வருவது
வலிமை தரவே
தோல்வி வருவது
சாதனை படைக்கவே

சகாதேவன் ரஜனி மாலா



# உனக்காகக் காத்திருக்கேன்....

இனி உனக்காக
நான் காத்திருக்கப்போவதில்லை
ஏனென்றால்
எதையும் தாங்கும் இதயமல்ல
என் பிஞ்சு நெஞ்சு

என்னுடைய நேரங்களையும்
நான் என்னுடனே செலவழிக்கிறேன்
தேவையில்லை


கைக்கடிகாரத்தில் ஓடும் முட்களை
வீணாகச் சுழலச் செய்வதை
இனி பிரயோசனம் செய்வோம்

மறந்துவிடுவோம்
முடித்துக்கொள்வோம்.

இனி உனக்காக
நான் காத்திருக்கப்போவதில்லை.

சிவகரன் விநோஜிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாமாகிய எல்லாவற்றுக்கும்...

○ கோகுலராகவன்

இங்கிருந்து' சிறுகதை நூலின் வெளியீட்டு விழா, யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் 7.10.2001 அன்று நடைபெற்றது. குமாரசாமி மண்டபத்தை உடுவில் அரவிந்தன் இலவசமாக ஏற்பாடு செய்திருந்தார். உடுவில் அரவிந்தன் இந்துவின் பழைய மாணவன்.

அப்போது இந்துவின் அதிபராக இருந்த அதிபர் சிறிக்குமரன் இந்த மண்டபத்தை தந்தமை
முக்கியமான அம்சம்.

நிகழ்வு மண்டபம், பார்வையாளர்களால் நிரம்பி இருந்தது.

ஒவ்வொரு எழுத்தாளர்களும் தங்களுடைய உறவினர்கள் அனைவரையும் அழைத்து வந்திருந்தமை இன்னும் அதிக வாசகர்கள் வரக் காரணமாகியது.

கதிர்காமநாதனும், தபினும் பஸ் பிடித்து தமது இன சனத்தை அழைத்து வந்திருந்தார்கள்.

அவ்வளவு உற்சாகம்.

எனது தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

அனைத்து மூத்த எழுத்தாளர்களையும் அழைத்து வந்தோம். எழுத்தாளர்கள் செங்கைஆழியான்,சொக்கன், சிற்பி சிவசரவணபவன். வரதர்,யேசுராசா,சட்டநாதன்,
குப்பிளான் சண்முகன், செம்பியன் செல்வன் போன்ற அனைத்து மூத்த எழுத்தாளர்களும் வந்திருந்தனர்.எழுத்தாளர்கள் வரதருக்கும் சொக்கனுக்கும் முதற்பிரதி வழங்கிக் கௌரவித்தோம். தாட்சாயணி வரவேற்புரை வழங்க செங்கை ஆழியானும், அதிபர் சிறிக்குமரனும் ஆசியுரை வழங்கினார்கள்.




சிற்பி சிவசரவணபவனை வெளியீட்டுரை நிகழ்த்த அழைத்திருந்தோம். ஆய்வுரையை செம்பியன் செல்வனும், யேசுராசாவும் வழங்கினர்.

ஏற்புரையை உடுவில் அரவிந்தன் வழங்க ,நன்றியுரையை சாரங்கா வழங்கினார்.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால் கோட்பாடு ரீதியில் வேறுபாடு கொண்ட எழுத்தாளர்கள் அனைவரையும் ஒரே வெளியீட்டு விழாவில் ஒரே மேடையில் அமரவும், பேசவும் வைத்தோம்.

இதில் பல மூத்த எழுத்தாளர்கள் இன்று எம்மோடு இல்லை . இவர்களை அழைத்து கௌரவப்படுத்தியது இன்று மன நிறைவைத் தருகின்றது. எழுத்தாளர் வரதர், வித்துவான் சொக்கன் ஆகிய இருவரும் அப்போதே வயதில் மூத்தவர்களாக இருந்தனர். வரதர் நீண்ட அனுபவத்தைக் கொண்டபடைப்பாளி. அவர் வீடு தேடிச் சென்று உரையாடி விழாவுக்கு அழைத்து வந்தோம்.

சொக்கன் தமிழறிஞர் .

யேசுராசா அவர்கள் அற்புதமான ஆய்வுரையை வழங்கி எம்மை ஒருவிதத்தில் ஆதரித்ததால் இன்றும் எழுதுகிறோம்.

அப்போது எமது எழுத்துக்கு களம் அமைத்த பத்திரிகையாக 'உதயன் சஞ்சீவி 'இருந்தது.

எமது அணியை "சஞ்சீவி எழுத்தாளர்கள்" என அழைக்கும் வழக்கமும் இருந்தது.

நாங்கள் போட்டிக்கு எழுவதுபோல எழுதிக்கொண்டிருந்தோம்.

வாரம் ஒருவரது கதை வெளிவரும்.

இதில் இன்னும் ஞாபகப்படுத்த வேண்டிய முக்கியமான ஒருவர் சஞ்சீவியை வடிவமைக்கும் உதவியாசிரியராக இருந்த குமாரதாஸ். எங்களைக் கண்டுபிடித்த பெருமை அவருக்குரியது.

முதன்முதல் எங்கள் கதைகளை இனங்கண்டு பிரசுரித்து எழுத்தாளர்களாக அறிமுகம் செய்து வைத்தவர்.

இது ஒரு பெரிய அனுபவம்தான். 'இப்போது இவ்வாறான ஒருவிழாவை ஏற்பாடு செய்யலாமா?' என்றால் கடினம்தான்.

இந்தக் கேள்வியைக் கதிர்காமநாதனிடம் கேட்டேன்.

சிரித்தார்.

"அது ஒரு காலமப்பா .ஓடி ஓடிச் செய்தோம்"

மஹாகவி உருத்திரமூர்த்தி சொன்னது போல்

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு "

"இங்கிருந்து "வரலாம்; அதே எழுத்தாளர்களுடன்.

சமர்ப்பணம்
எல்லாமுமாகிய
எல்லாவற்றுக்கும்.

(இன்னும் கதைப்பம்)

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

### 1942 பெப்ரவரி

இரண்டாம் உலகமகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். அச்சு நாடுகளின் படைகள் இலங்கை மீதும் தாக்குதல் நடத்தினால் , எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றிய முன்னாயத்தக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. இந்தக்கூட்டங்களில் பாதுகாப்பு, உணவுப்பாதுகாப்பு போன்ற விடயங்கள் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டன. இலங்கை முழுவதிலும் (யாழ்ப்பாணம் உட்பட) விமானக் குண்டு வீச்சு பாதுகாப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டன விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி என்ற நூலும் வெளியிடப்பட்டது. ஜப்பானின் தாக்குதல் காரணமாக,பாதுகாப்புக்கருதி மலாயாவிலிருந்த தமிழர்கள் பலர் இலங்கை வந்து சேர்ந்தனர். மலாயாவில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையும் ஆளுநரால் ஆரம்பிக்கப்பட்டது.ஜீ.ஜீ. பொன்னம்பலம் 500.00 ரூபா அன்பளிப்புச் செய்தார்.

### 1942 மார்ச் 08

மருத்துவர் போல் காலமானார். 1872 ஆம் ஆண்டு பிறந்த இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனாவார். FRCSபட்டம் பெற்ற கீழைத்தேய நாட்டவர்களுள் முதலாவது மருத்துவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை மருத்துவசபை அங்கத்தவராகவும் விளங்கிய போல், சத்திரசிகிச்சை விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவரின் விடுமுறைக்கால பங்களா கீரிமலையில் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் (மஹிந்தவின் 7 நட்சத்திர விடுதிக்கு அருகே) உள்ளது.

### 1942 ஏப்ரல்

முற்றவெளியில் விமானக்குண்டு வீச்சு தொடர்பான முன்னெச்சரிக்கை அபாயச்சங்கு பொருத்தப்பட்டது.

### 1942 ஏப்ரல் 08

கொழும்பில் ஜப்பானிய விமானங்கள் தாக்குதல்.

இந்த விடயம் தொடர்பாக 08.04.1942 அன்று பகல் 12.40 மணிக்கு தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை வருமாறு.

இன்று காலை 75 ஜப்பானியத் தாக்குதல் விமானங்கள் தாழப்பறந்து இயந்திரத்துப்பாக்கிகள் மூலம் கொழும்புத் துறைமுகப்பகுதியிலும் இரத்மலானையிலும் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் சொற்ப அளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்தனர். 25 விமானங்கள் பிரிட்டிஷ் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது கொழும்பு மருத்துவமனை மருத்துவர்களும் தாதியர்களும் இவர்களுக்குரிய சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர். மருத்துவ, சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் S.F.செல்லப்பா , தாக்குதல் தொடர்பான மருத்துவமனை செய்தித்தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் கீழ் நான்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். ஒதுக்குப்புறமாக உள்ள ஒரு தேவாலயத்தின் கூரை ஊடாக சன்னங்கள் தெறித்துள்ளன .பெரிய பாதிப்புகள் எதுவுமில்லை.

### 1942 மே 8

இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் பணிகள் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பமாகின.

மேஜர் மேர்வின் ஜோசப் ,யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் கோட்டையிலும் ஏனைய மணியகாரர் பிரிவுகளிலும் நேரடியாக இராணுவத்துக்கு ஆட்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். இராணுவத்தில் தமிழ்ப் பிரிவு உருவாக்கப்பட்டது. 9 ஆம் திகதி ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் பாடசாலையில் ஆட்சேர்ப்பு நடைபெற்றது. ஒரு வாரம் இந்த இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் பணிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.யாழ்ப்பாணத்தில் இருந்த பெண்கள் சிலர் நேர்முகப்பரீட்சைக்கு வந்தவர்களுக்கு தேநீர் வழங்கி உபசரித்தனர்.இராணுவத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை வழியனுப்புவதற்காக அவர்களது உறவினர்கள்.நண்பர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பெருந்திரளான மக்கள் யாழ்.புகையிரத நிலையத்தில் திரண்டிருந்தனர். இதனால் யாழ். புகையிரத நிலையம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

### 1942 மே 21

முற்பகல் 10.30 மணியளவில் அல்லைப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட படகு ஒன்று. புறப்பட்டு சிறிது நேரத்தில் கடலில் மூழ்கியது.18 பேர் பயணம் செய்யக்கூடிய படகில் 60 பேரை படகோட்டிகள் ஏற்றியிருந்தனர். அதிகளவு பயணிகளை ஏற்றியமையால் சிலர் படகில் ஏற மறுத்தனர். அத்துடன் பாய்க்கட்டுகளும் படகில் ஏற்றப்பட்டிருந்தன. படகோட்டிகள் பயணிகளின் உயிருக்கு தாங்கள் உத்தரவாதம் எனக்கூறி அனைவரையும் ஏற்றிச்சென்றனர். படகு புறப்பட்டு சிறிது நேரத்தில் படகின் இயந்திரம் செயலிழந்து விட்டது . அந்த நேரம் பார்த்து பாரிய அலை ஒன்று படகைத் தாக்கியது. படகிலிருந்த பாய்க்கட்டு,தலையணை என்பன நீரில் மூழ்கின. தொடர்ந்து படகும் நீரில் மூழ்கியது.படகோட்டிகள் உதவி கோரவில்லை. பயணிகள் சிலர் வழங்கிய தகவலையடுத்து இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே பொலிஸுக்குத் தகவல் கிடைத்தது. பொலிஸார் விரைந்துசென்ற போதும் கரையில் படகுகள் எதுவும் காணப்படவில்லை. பொலிஸார் கரையில் நின்ற கட்டுமரத்தில் ஏறி படகை அடைந்தனர். தொடர்ந்து மோட்டார் படகும் உதவிக்கு வந்தது.எனினும் 19 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். நீரில் மூழ்கியவர்களின் சடலங்கள் புங்குடுதீவிலும் ஏனைய தீவுகளிலும் கரையொதுங்கின.இறந்தவர்களில் பெரும்பாலானோர் பாடசாலை விடுமுறை முடிந்து பாடசாலை செல்வதற்காக யாழ்ப்பணம் நோக்கி வந்து கொண்டிருந்தவர்கள். பொரளையில் கடை வைத்திருந்த நாகலிங்கத்தின் குடும்பத்தினரும் இந்தப் படகு விபத்தில் உயிரிழந்தனர்.

### 1942 செப்ரெம்பர்

யாழ்ப்பாணத்தில் முதலாவது பொதுக்கிணறு உடுவிலில் திறந்து வைக்கப்பட்டது.

திரு.தனபாலசிங்கம் அவரது மனைவி அன்னம்மாளின் ஞாபகார்த்தமாக பொதுக்கிணறு ஒன்றையும் மடம் ஒன்றையும் அமைத்தார். அரசாங்க அதிபர் பிரசாத் இந்த மடத்தையும் கிணற்றையும் திறந்து வைத்தார்.திரு.நடேசன்,ஈழகேசரி அதிபர் பொன்னையா உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்தக்கிணற்றின் மூலம் 150 குடும்பங்கள் பலனடைவர் என திறப்புவிழாவில் கலந்து கொண்டோர் உரையாற்றினர். சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதே தனபாலசிங்கத்தின் நோக்கமாக இருந்தது.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் (தமிழர்கள்)பிரிட்டிஷ் சார்பு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். சிங்களத் தலைவர்கள் (பண்டாரநாயக்கவின் சிங்கள மகாசபை) நடுநிலை வகிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

### 1942 டிசம்பர் 02

அருணாசலம் மகாதேவா உள்நாட்டலுவல்கள் அமைச்சராக நியமனம்.அருணாசலம் மகாதேவாவுக்கு ஐந்து வாக்குகளும் அவரை எதிர்த்துப்போட்டியிட்ட அமரசூரியாவுக்கு மூன்று வாக்குகளும் கிடைத்தன. அதுவரை காலமும் தனிச்சிங்கள அமைச்சரவையாக இயங்கி வந்த இலங்கை சட்டசபை அமைச்சரவையில் முதலாவது தமிழ் அமைச்சராக அருணாசலம் மகாதேவா நியமிக்கப்பட்டார்.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
23 ஜூலை 2023



குருமன்காட்டாள் வன்னிகா

# நாட்டை விழுங்கும் போதை

அதிகரித்த மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை ஆகியவற்றால் வடக்கு மாகாணத்தில் நரம்பியல் நோய்கள் அதிகரித்துள்ளதாக நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்துள்ளார். பக்கவாத நோய், விபத்துகளால் ஏற்படும் மூளைச் சிதைவு, மாரடைப்பு முதலிய நோய்கள் வடக்கில் போதையின் பாதிப்பால் அதிகரித்துள்ளதையும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பக்கவாத நோய்க்குரிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாடு நீண்டகாலப் போரின் தாக்கங்களிலிருந்து விடுபடமுன்னர் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. அதனால் மருத்துவ உபகரணங்களுக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் இத்தகைய பாதிப்புகளால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் அடிப்படையான உணவு, உடை வசதிகளை இழந்து, குடும்ப வன்முறைக்குள்ளாகியுள்ளன. பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், போஷாக்கு ஆகியன முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, சமூக அமைதியின்மை, சுகாதாரத்துறைப் பிரச்சினை, கல்விச் சீரழிவு, போக்குவரத்துச் சேவை சீர்குலைவு நிச்சயமின்மை, அபிவிருத்திக்கான சூழல் குன்றிப் போதல், மனித வளம் அழிதல் முதலிய நெருக்கடிகள் உள்ளன. இவை அபிவிருத்திக்குத் தடையாக அமையும் சூழலாகும்.

பொருளாதார மீட்சிக்காக இலங்கை மிகக் கவனமாக நிதிமுகாமைத்துவம் செய்யவேண்டும் எனவும் இலங்கைக்கு அடுத்துவரும் இரண்டு ஆண்டுகள் முக்கியமான காலம் ஆகும் எனவும் உலகவங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். மந்தகதியில் பொருளாதார மறுசீரமைப்புச் செய்யப்பட்டால் பொருளாதார மீட்சி தாமதம் அடையும் எனவும் அவர் கூறினார்.

மந்த போசணையால் 40% க்கும் மேற்பட்ட சிறுவர்கள், பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்கட்டத்தில் மது மற்றும் போதைப் பொருள்களால் ஏற்படும் வன்முறைகள், வீதி விபத்துகள், நரம்பியல் நோய்கள், ஏனைய தொற்றா நோய்கள் ஆகியவற்றினால் பாதிக்கப் படுவோரின் மருத்துவப்பராமரிப்பு, இலவச மருத்துவத்துறைக்கு பெரும் சுமையாகும்.

அவ்வாறே மது மற்றும் போதைப் பொருள்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு குடும்பங்கள் உள்ளாகும் நிலையில் அத்தகைய குடும்பப் பின்புலங்களிலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களை கல்வி நிர்வாகம் கையாளுவதில் நெருக்கடிகளைச் சந்திக்கிறது. இவ்வாறான நிலையில், ஏனைய மாணவர்களும் அத்தகைய தீய பழக்கங்களுக்கு ஆளாகும் சூழ் நிலை எழுகிறது. கற்றல் - கற்பித்தல் சூழல் நெருக்கடிக்கு உள்ளாகிறது. இலவசக் கல்வித்துறை பல்வேறு காரணிகளால் ஏற்கனவே விளைதிறனற்றதாகிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தச் சவாலும் அவற்றுடன் சேரும்போது நிலைமை மோசமாகும்.


அதேவேளை தனியார் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள்(ரியூட்டறிகள்) மற்றும் ஏனைய தனியார் கல்வி நிறுவனங்கள், மது மற்றும் போதைப் பொருள்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் மாணவர்கள் குறித்து ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கவோ பலமான கட்டமைப்புகள் இல்லாதவையாகவேயுள்ளன. மதுப்பாவனை மற்றும் போதைவஸ்துப் பாவனை ஆகியவற்றால் அரச பல்கலைக்கழகங்களிலும் சில தனியார் பல்கலைக்கழகங்களிலும் கணிசமான மாணவர்கள் சிதையத் தொடங்கியுள்ளனர்.

இவற்றிலிருந்து தம்மை விலக்கி வைத்து தம் உடல் உள ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொண்டு கற்றுத் தேற முற்படும் மாணவர்களும், மதுப்பாவனை மற்றும் போதை வஸ்துப் பாவனைக்குட்பட்ட மாணவர்களினால் உருவாகும் வன்முறைசார் குரோதச் சூழ்நிலைகளால் தமது கல்வியை இழந்து வருகின்றனர்.

இவற்றின் விளைவு , நாட்டின் கல்வித் துறைகளின் தோல்விகரமான வீழ்ச்சியாக அமையப் போகிறது. சமூகத்தில் வன்முறைகள் மிக்க 'கிரிமினல்கள்' உருவாகுவார்கள். நாட்டின் அரச நிர்வாகத்தில் மட்டுமல்ல தனியார் துறை, அரசசார்பற்ற துறை ஆகியவற்றிலும் ஊழல் மோசடி மிக்க கிரிமினல்கள் மேலும் பெருகுவர்.

நாட்டின் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு மனித வளத்தை உருவாக்கும் கல்வித் துறை காப்பாற்றப்படாவிட்டால் நிர்வாகத்துறை, நீதித்துறை, சட்ட ஆக்கத்துறை, ஜன நாயகத்தின் காவலனான ஊடகத்துறை, உணவு உற்பத்தியுடன் நேரடித் தொடர்புள்ள விவசாயத்துறை, மீன்பிடித்துறை மற்றும் மருத்துவத்துறை, கைத்தொழில்துறை, போக்குவரத்துத்துறை, தொலைத் தொடர்புத் துறை முதலிய சகலவற்றிலும் ஈடாட்டமும் பலவீனமும் தோன்றத் தொடங்கும். ஊழல் மோசடிகளும் அதிகார துஷ்பிரயோகங்களும் கட்டுப்பாடில்லாமல் பெருகும்.

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கை மக்களால் எழ முடியாமல் போகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

